## சுருக்கம்

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு அனுமதிக்கப்பட்ட இணை இயக்குநர் பணியிடத்துடன் தொடர்புடைய சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களிலிருந்து பணி நிரவல் அடிப்படையில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எக்ஸ்.2)த் துறை

அரசாணை (நிலை) எண். 305

நாள். 26.11.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
கார்த்திகை 10

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண். 138, பள்ளிக் கல்வி (எக்ஸ்.2) துறை, நாள். 30.6.2008.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 2836/அ1/08, நாள். 25.8.2010.

------

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகத்திற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு உதவி இயக்குநர் பணியிடங்களை சரண்செய்து அதற்கு பதிலாக ஒரு இணை இயக்குநர் பணியிடம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இணை இயக்குநர் பணியிடத்துடன் தொடர்புடைய சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்கள் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்படவில்லை என்பதால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள கீழ்க்கண்ட பணியிடங்களை பணி நிரவல் மூலமாக (Re-deployment) மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு மாறுதல் செய்யுமாறு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் கோரியுள்ளார்.

| வ.எண். | அலுவலகத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் |
|---|---|---|
| 1. | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், சேலம் | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III |
| 2. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், கோயம்புத்தூர். | அலுவலக உதவியாளர் |

3. மேலே பத்தி 2–ல் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்து, அதனை ஏற்று, மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள மேற்படி பணியிடங்களை இனி நிரப்பக்கூடாது என்றும் மற்றும் இனி எதிர்வரும் காலங்களில் இப்பணியிடங்களை

...2...

ஒப்பளித்திட கோரக்கூடாது என்ற நிபந்தனைகளின் அடிப்படையில், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய இரு பணியிடங்களையும் பணி நிரவல் மூலமாக (Re-deployment) கீழ்குறிப்பிட்டுள்ளவாறு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு மாற்றம் செய்து ஆணையிடுகிறது.

| வ.எண். | அலுவலகத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது பணி நிரவல் மூலம் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் அலுவலகம் | பணியிடம் அனுமதிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், சேலம் | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III -1 (ஒன்று) | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6. | அரசாணை (நிலை) எண் 365 பள்ளிக் கல்வித் துறை நாள் 24.10.2000 |
| 2. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகம், கோயம்புத்தூர். | அலுவலக உதவியாளர் –1 (ஒன்று) | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6. | அரசாணை (நிலை) எண் 1343 கல்வித் துறை நாள் 4.9.1986. |

மேற்கண்டவாறு பணி நிரவல் மூலம் மாறுதல் செய்யப்பட்ட பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் இதர தொடர்புடைய செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் I திட்டத்தில் சேராதது – AC மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – நிருவாகம் – 01 சம்பளங்கள்". (த.தொ.கு 2202–02–001– AC–0102)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 64985/Edn-II/10 நாள். 15.11.2010 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6.
மாநில கணக்காயத் தலைவர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட கருவூல அலுவலர், சேலம்/கோயம்புத்தூர்.
மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்கள்,
சேலம்/கோயம்புத்தூர்.

நகல்:–
நிதித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

30/11/10